**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.53/2025 - PW- 12**

| | |
|---|---|
| Name | திரு. யுவராஜ் |
| Husband/Father Name | ரங்கா ராவ் |
| Village /Area | கிழவனம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | பேக்கரி ஊழியர் |
| Age | 26 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 13.11.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 05.09.2024 அன்று நான் வேலைக்கு சென்று வந்துக்கொண்டிருந்த போது போலீசார் என்னை மடக்கி சந்திரன் என்பவர் இறந்தது சம்பந்தமாக விசாரணை செய்வதாகவும், அது குறித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதில் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நானும் சந்திரபாபும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.5** ஆக குறியீடு செய்ய்படுகிறது.

சம்பவ இடத்தில் இருந்து போலீசார் என் முன்னிலையிலும் என்னுடன் சாட்சி கையொப்பம் செய்த சந்திரபாபு முன்னிலையிலும் TVS இரு சக்கர வாகனத்தையும், கல்லையும் கைப்பற்றினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள

இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அவைகள் முறையே **அதசாஆ.6** மற்றும் **அதசாஆ.7** ஆக குறியீடு செய்ப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் TVS இரு சக்கர வாகனம் பதிவண். TN 23 L 2601 அது ஏற்கனவே சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**1 முதல் 5 வரை எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் கும்மினிப்பேட்டையில் வேலை செய்து வருகிறேன். நான் முதல் விசாரணையில் கூறிய விவரங்களை போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். என் முன்னிலையில் கைப்பற்றிய கல் இரத்தக்கறை படிந்த கல் தான். இரவு 09.30 மணியளவில் எங்கள் முன் அந்த கல் கைப்பற்பட்டது. சம்பவ இடத்திற்கு அருகில் வேகத்தடை இருந்தது.

நான் செல்வதற்கு முன்பாகவே போலீசார் சம்பவ இடத்தில் இருந்தார்கள். சுமார் 20 நபர்கள் இருந்திருப்பார்கள். சம்பவம் நடந்த இடமானது வெளிச்சமான இடம் என்று சொன்னால் சரிதான். பார்வை மகஜரில் நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. பார்வை மகஜரில் சம்பவம் நடந்த இடம் மற்றும் அந்த இடத்தை சுற்றியுள்ள பகுதிகள் பற்றி என்ன எழுதப்பட்டிருந்தது எனறு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தில் இறந்த சந்திரன் எனது உறவுக்காரர் இல்லை.

இந்த வழக்கில் சாட்சியாக உள்ள அசா.7 மகா லட்சுமி எனது உறவினாரா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்தில் இருந்த போது இரு சக்கர வாகனம் கீழே விழுந்திருந்ததா என்றால் ஆமாம். நான் கூறுவது போல் நான் சென்ற இடத்தில் நான் சொன்ன இடத்தில

பார்வை மகஜர் தயார் செய்யப்படவில்லை மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்தவர் எனது உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.13 18:30:06 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.